BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

# தி. ஜானகிராமன் நாவல்களில் கைம்பெண்கள்

**முனைவர் மு. அழகுராணி**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு, இந்தியா

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கிய மரபில் குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் பாதியில், கைம்பெண்கள் என்பவர்கள் ஒடுக்கப்பட்டவர்களாகவும் சடங்குகளுக்குள் முடக்கப்பட்டவர்களாகவும் சித்தரிக்கப்பட்டனர்.ஆனால் தி.ஜா தனது நாவல்களில் கைம்பெண்களை வெறும் இரக்கத்திற்குரிய மனிதர்களாகக் காட்டாமல் சுயசிந்தனை, அழகு மற்றும் ஆளுமை நிறைந்தவர்களாகக் காட்டியுள்ளார். தி.ஜானகிராமன் தனது நாவல்களில் பாரம்பரிய குடும்ப அமைப்பில் வாழ்ந்த கைம்பெண்களின் அகஉலகையும் அவர்களின் பாலியல் மற்றும் உளவியல் தேவைகளையும் மிகத்துணிச்சலாக ஆராய்ந்துள்ளார். தி.ஜா அவர்களின் தனித்துவமான பெண் பாத்திரப் படைப்புகளும் சமூக ஒழுக்கவியல் மீதான அவரது பார்வைகளும் நாவல்கள் வழி அறிய முடிகிறது. அவற்றை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள் :** கைம்பெண், சடங்கு, உளவியல், பாலியல், ஆளுமை

## முன்னுரை

தமிழ் நாவல்களில் கைம்பெண் சித்தரிப்பு என்பது ஆரம்பகால நவீன இலக்கியம் தொட்டு மிக முக்கியமான ஒரு சமூக, உளவியல் பாடுபொருளாக இருந்து வந்துள்ளது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து 20 ஆம் நூற்றாண்டின் பிற்பாதி வரை வெவ்வேறு காலகட்ட எழுத்தாளர்கள் கைம்பெண்களின் நிலையைத் தங்கள் நாவல்களில் கையாண்ட விதம் பெரும் சமூக மாற்றங்களை ஏற்படுத்தியது.குறிப்பாக தி.ஜா அவர்களின் நாவல்கள் தஞ்சை வட்டாரத்தைப் பின்புலமாகக் கொண்டு அந்தணர் மற்றும் மேல்தட்டு மக்களின் சமூக வாழ்க்கைச் சிக்கலைத் தம் எழுத்தில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அவர் எழுதிய நாவல்கள் பலவற்றிலும் கைம்பெண்டிர் வாழ்வு சித்தரிக்கப்பட்டமையும் சமூக நெருக்கடிக்கு ஆளாகும் அக்கைம்பெண்டிர் நிலை குறித்தும் **“அம்மா வந்தாள்”, “செம்பருத்தி”, “மோகமுள்”** ஆகிய நாவல்களின் வழியே விரிவாகக் காணலாம்.

## தி. ஜானகிராமன்

20 ஆம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய உலகின் மிக முக்கியமான நவீனத்துவ எழுத்தாளர்களுள் ஒருவர். தஞ்சை மண்ணின் கலாச்சாரம், கர்நாடக சங்கீதம் மற்றும் ஆண்-பெண் உறவுகளின் ஆழமான சிக்கலைத் தத்ரூபமாக தன் படைப்புகளில் வெளிப்படுத்தியவர்.இவர் தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடிக்கு அருகில் உள்ள தேவங்குடி கிராமத்தில் ஜூன் 28, 1921 ஆம் ஆண்டு பிறந்தார்.இவர் முதலில் பள்ளி ஆசிரியராகவும் பின்னர் வானொலியில் கல்வி ஒளிபரப்பு அமைப்பாளராகவும் பணியாற்றினார். இவரது முக்கிய நாவல்களான மோகமுள்(1964), அம்மா வந்தாள்(1966), மரப்பசு(1975), செம்பருத்தி(1968), உயிர்த்தேன்(1967) நாவல்கள் தவிர நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் நாடகம், ஜப்பான் பயணக் கட்டுரை(உதய சூரியன்) போன்ற பிற இலக்கிய வடிவங்களையும் படைத்துள்ளார்.இவர் 1979 இல் தம் சக்திவைத்தியம் என்னும் சிறுகதைத் தொகுதிக்காகச் சாகித்திய அகாதமி விருது பெற்றார்.1982 இல் தம் 61 ஆம் வயதில் காலமானார்.

**கைம்பெண்**

கைம்மை+பெண்-கைம்பெண். கைம்மை என்ற சொல்லுக்குத் தனிமை அல்லது ஒழுக்கம் என்று பொருள்.கணவனை இழந்து தனிமையில் வாழும் பெண் அல்லது கணவனை இழந்த பின்னும் தன் ஒழுக்கத்தைக் காத்து வாழும் பெண் என்பது இதன் பொருளாகும்.பேச்சு வழக்கில் விதவை என்றும் அழைப்பார்கள். இது வடமொழிச் சொல்லான 'வித்வா' என்பதிலிருந்து வந்ததாகும்.

பெண்ணுக்கு மட்டுமே 'கற்பு' என்று சொல்லப்பட்ட மணிமேகலை இதனை மூவகையாகப் பிரித்துள்ளது. தலைக்கற்பு, இடைக்கற்பு, கடைக்கற்பு. அவை,

*"காதலர் இறப்பின் கனை எரி பொத்தி*
*ஊது உலைக் குருகின் உயிர்த்து அகத்து அடங்காது*
*இன் உயிர் ஈவர் ஈயார் ஆயின்*
*நல் நீர்ப் பொய்கையின் நளி எரி புகுவர்*
*நளி எரி புகாஅர் ஆயின் அன்பரோடு*
*உடன் உறை வாழ்க்கைக்கு நோற்று உடம்பு அடுவர்*
*பத்தினிப் பெண்டிர் பரப்புநீர் ஞாலத்து"*

*(மணிமேகலை, 2;42-48)*

என்ற பாடலின் வழியே கற்பின் மூன்று நிலையினைக் கூறுகிறது.இப்பாடலில் கடைக்கற்பு உடையோரே கைம்பெண்டிராய் வாழ்க்கை நடத்துகின்றனர் என்பதைக் குறிப்பிடுகிறது.

இளம் வயதில் கணவனை இழந்த பெண்களை **'வாடாத பூ போன்ற மங்கை நல்லாள்'** என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.ஆச்சாரம் மிகுந்த மேல்தட்டு மக்கள் இல்லங்களில் கைம்பெண்டிர் மிகுந்த நெருக்கடிகளுக்கு ஆளாக்கப்பட்டனர். மங்கல நிகழ்ச்சிகளில் பங்கேற்கக் கூடாது, பகற்பொழுதில் வெளியில் தலைகாட்டக்கூடாது, தலை முடியை மழித்தல், பூ வைக்கக் கூடாது, வண்ணச் சேலைகள் கட்டுதல் கூடாது என்பன அப்பெண்களுக்கு விதித்த கட்டுப்பாடுகள் ஆகும்.

**தி. ஜானகிராமன் நாவல்களில் கைம்பெண்டிர்**

தி.ஜானகிராமன் எழுதிய 10 நாவல்களில் அம்மா வந்தாள், செம்பருத்தி, மலர்மஞ்சம், நளபாகம், மரப்பசு, மோகமுள் ஆகிய ஆறு நாவல்களில் கைம்பெண்டிர் நிலை மற்றும் துயரைக் குறிப்பிட்டுள்ளார்.இவற்றில் **'அம்மா வந்தாள்', 'செம்பருத்தி', 'மோகமுள்'**நாவலின் கைம்பெண் நிலை பற்றி விரிவாகக் காணலாம்

**அம்மா வந்தாள்**

தி. ஜானகிராமன் எழுதிய 'அம்மா வந்தாள்' நாவலில் அக்கால சமூகத்தில் வாழ்ந்த கைம்பெண்டிர் எதிர்கொண்ட கடுமையான ஒடுக்கு முறைகளும் அதற்கு எதிரான அவர்களின் மனப்போராட்டமும், மீறல்களும் மிக நுட்பமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் பிராமண சமூகப் பின்னணியில் பாரம்பரிய விதிகளின்படி வாழ்விழந்த பெண்களாகக் கருதப்பட்ட கைம்பெண்களின் அகஉலகை இந்து மற்றும் பவானியம்மாள் ஆகிய பாத்திரங்களின் மூலம் நாவலாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

**சமூகக் கட்டுப்பாடுகளும் உடல் மறுப்பும்**

1960 களின் காலகட்டத்தில் விதவை நிலையை அடைந்த பெண்கள் தங்களின் ஆசைகள், உணர்வுகள் மற்றும் அழகியல் அனைத்தையும் துறந்து ஒரு ஜடமாக வாழ வேண்டும் என்று சமூகம் எதிர்பார்த்தது. நாவலில் வரும் இந்து பாத்திரம் இந்த நிலையை முற்றிலும் பிரதிபலிக்கிறது. இளம் வயதிலேயே கணவனை இழந்து விதவையானவள் வேத பாடசாலையில் வாழ்கிறாள்.

சமூகம் அவளது உடலின் மீது திணித்த கட்டுப்பாடுகளைப் பற்றிப் பேசும்போது,

*"இந்த உடம்புக்கு தான் தாலி கட்டினர்*
*அப்புறம் இந்த உடம்புல இருந்து தாலியை கழட்டினர்"*

என்று கூறி பெண்ணின் தன்னுரிமையைச் சமூகம் எவ்வாறு தாலியின் வழியே சுருக்குகிறது என்பதை இந்நாவல் வெளிப்படுத்துகிறது.

**கைம்மையைக் கடந்த காதல் உணர்வு**

பாரம்பரிய சமூகம் கைம்பெண்களுக்கு காதலோ, காமமோ இருக்க கூடாது என வேலி போட்டது. ஆனால் இந்துவின் பாத்திரம் இந்த வேலையைத் தகர்க்கிறது.அவள் சிறு வயது முதலே வேத பாடசாலையில் பயின்ற அப்புவின் மீது அலாதியான காதலும் ஈர்ப்பும் கொண்டவள்.

அப்பு வேதம் படித்து முடித்துவிட்டு தன் ஊருக்குக் கிளம்பத் தயாராகும் போது அவனிடம் தன் காதலை வெளிப்படையாகப் பேசுகிறாள்.

அவனது நினைவே தனக்குத் துணையாக இருந்ததாகக் கூறுகிறாள். தன் மனதிற்குள் அப்புவை எப்போதோ கணவனாக ஏற்றுக் கொண்ட அவளது உணர்வு கைம்பெண்களுக்கும் இயல்பான மனித உணர்வுகளும் ஆசைகளும் உண்டு என்பதை உரக்கச் சொல்கிறது.

**மரபுகளை உடைக்கும் ஆளுமை மற்றும் மீறல்**

சமூகத்தின் 'ஒழுக்கம்' குறித்த இரட்டை நிலையை இந்துவின் பாத்திரம் தோலுரித்துக் காட்டுகிறது. அப்பு அவளது காதலை மறுத்து, அவளைத் தன் தாயோடு ஒப்பிடும்போது கோபமடையும் இந்து, அப்புவின் தாயான அலங்காரத்தம்மாளின் திருமணத்தைக் கடந்த உறவைச் சுட்டிக்காட்டிப் பேசுகிறாள்.

*"அவ யாரையோ நினைச்சிண்டு*
*உங்க அப்பாவ ஏமாத்திட்டு இருக்கா, நான்*
*உன்ன தவிர யாரையும் நினைச்சதில்லடா பாவி"*

என்று கூறி, தாலி கட்டிய கணவனுக்குத் துரோகம் செய்யும் பெண்ணை விட, தன் மனதில் தூய்மையான காதலைச் சுமக்கும் ஒரு கைம்பெண் எவ்வளவோ மேலானவள் என்று தார்மீகக் கேள்வியை எழுப்புகிறாள்.

**பவானியம்மாள் –ஆன்மீகப் பக்குவம் மற்றும் தற்சார்பு**

நாவலில் வரும் மற்றொரு கைம்பெண் பாத்திரமான பவானியம்மாள். இந்துவின் நிலைக்கு நேர்மாறான, பக்குவப்பட்ட முதிர்ச்சியான நிலையை தனித்துவமாகக் காட்டுகிறார். கணவனை இழந்தபின் முடங்கி விடாமல் சொந்தமாக ஒரு வேத பாடசாலையைத் தொடங்கி நடத்துகிறார். சமூகத்தில் தற்சார்போடு வாழும் ஒரு பெண்ணாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறார். இந்துவின் அகப்போராட்டங்களை ஓரளவுக்கு புரிந்து கொண்டு அவளுக்கு புகலிடமாக விளங்குகிறார்.

"அம்மா வந்தாள்" நாவலில் தி. ஜானகிராமன் பெண்களை இரக்கத்திற்குரிய பாத்திரங்களாகக் காட்டவில்லை. மாறாக, சமூக விதிகளையும் கட்டுப்பாடுகளையும் உடைத்து தங்களின் உணர்வுகளுக்காகவும் தற்சார்புக்காகவும் போராடும் வலிமையான ஆளுமைகளாகவே காட்டியுள்ளார். கைம்மை என்பது ஒரு பெண்ணின் வாழ்வின் முடிவு அல்ல. அவளுக்குள்ளும் ஆசைகளும் சுயமரியாதையும் வாழும் உரிமையும் இறுதிவரை உண்டு என்பதை இந்நாவல் மிக ஆழமாகப் பதிவு செய்துள்ளது.

**செம்பருத்தி**

தி. ஜானகிராமனின் 'செம்பருத்தி' நாவல், தமிழ் இலக்கியத்தின் பெண்களின் ஆழ்மன உணர்வுகள், காமம், மற்றும் குடும்ப அரசியலை உளவியல் பூர்வமாக அலசும் ஒரு முக்கியப் படைப்பாகும். இந்நாவலில் வரும் கைம்பெண்டிர் நிலை, சமூகக் கட்டுப்பாடுகளையும் கடந்து அவர்களின் தனிப்பட்ட தவிப்புகள், உடலியல் தேவைகள், மற்றும் சமூகத்தின் இரட்டை வேடங்களை மிகத் துல்லியமாகச் சித்தரிக்கிறது.

**கைம்பெண்டிர் நிலையின் சமூகப் பின்னணி**

நாவலில் வரும் கூட்டுக்குடும்ப சூழலில், கைம்பெண்களாகும் பெண்கள் மீது சமூகம் திணிக்கும் கட்டுப்பாடுகள் மிகக் கடுமையானவை. அவர்கள் வண்ண ஆடை உடுத்தக் கூடாது, சிகை அலங்காரம் செய்யக் கூடாது, குடும்ப நிகழ்வுகளில் ஒதுக்கப்பட வேண்டும் போன்ற பழமைவாத நம்பிக்கைகள் ஆழமாக வேரூன்றியிருக்கின்றன. சமூகத்திற்குப் பயந்து இவர்கள் தங்கள் இயல்பான உணர்வுகளை அடக்கி, ஒரு விதமான துறவற வாழ்க்கையை வாழ வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

**பெரிய அண்ணி - ஆழ்மனத் தவிப்புகளின் குறியீடு**

'செம்பருத்தி' நாவலின் முதன்மைக் கதாபாத்திரமான பெரிய அண்ணி, கைம்பெண்களின் நிலையை ஆழமாகப் பிரதிபலிக்கிறார்.

**காதலும் ஏக்கமும்**

தான் ஒரு காலத்தில் காதலித்தவனையே, தம்பியாக (சட்டநாதன்) தனது குடும்பத்திற்குள் பார்க்கும் துயரமான சூழ்நிலையில் வாழ்கிறாள். கணவனின் மறைவுக்குப் பிறகு, அந்த வீட்டில் விதவையாக முடக்கப்பட்டாலும், அவரது ஆழ்மனதில் இருக்கும் காமமும், அன்பும் அழியாமல் உயிர்ப்புடன் இருக்கின்றன.

**அடக்கப்பட்ட உணர்வுகள்**

பல வருடங்களாகத் தன் உணர்வுகளை வெளிக்காட்டாமல், ஒரு சிற்பத்தைப் போல வாழும் பெரிய அண்ணியின் மனப்போராட்டம், விதவைகளின் ஒடுக்கப்பட்ட பாலியல் மற்றும் உணர்வுத் தேவைகளை வெளிப்படுத்துகிறது.

**வெறுப்பும் முதிர்ச்சியும்**

நாவலின் போக்கில், பெரிய அண்ணியின் நீண்டகால அடக்குமுறை ஒரு கட்டத்தில் காதலாகவும், பின்னர் தீவிரமான வெறுப்பாகவும் மாறி வெடிக்கிறது. சமூகத்தின் விதிகளுக்குப் பணிந்து வாழும் விதவைப் பெண்களின் மனநிலை, முரண்பாடுகளின் போராட்டத்தில் எப்படிச் சிதைந்து போகிறது என்பதை இக்கதாப்பாத்திரம் வெளிப்படையாக உணர்த்துகிறது.

**சமுதாயத்தின் முரண்பாடு**

தி. ஜானகிராமன், கைம்பெண்களைப் பரிதாபத்திற்குரியவர்களாக மட்டும் காட்டாமல், அவர்களுக்கும் ஆன்மா, ஆசை, மற்றும் உரிமை உண்டு என்பதை நாவல் முழுக்க உரக்கப் பேசுகிறார். குடும்ப உறுப்பினர்கள் கைம்பெண்களை எப்படிப் பாலியல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் சுரண்டுகிறார்கள் அல்லது புறக்கணிக்கிறார்கள் என்பதை நாவலின் அரசியல் நுட்பமாக விவரிக்கிறது இந்நாவல்.

'செம்பருத்தி' நாவலில் கைம்பெண்டிர் நிலை என்பது வெறும் சமூக அவலமாக மட்டும் இல்லாமல், பெண்களின் உளவியல் சிக்கல்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் சமூக விதிமுறைகளுக்கு எதிரான அவர்களின் மௌனப் போராட்டமாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளது.

**மோகமுள்**

தி.ஜானகிராமனின் 'மோகமுள்' நாவலில் வரும் யமுனாவின் கைம்மை நிலை, சமூகக் கட்டுப்பாடுகளையும், மரபையும் மீறும் ஒரு பெண்ணின் மனப் போராட்டத்தை விவரிக்கிறது. கணவனை இழந்த நிலையிலும், தன் இசை ஞானத்தால் வாழ்க்கையை எதிர்கொள்ளும் யமுனாவின் பாத்திரம், பெண்ணியம் மற்றும் மானுட உணர்வுகளின் சங்கமமாகப் படைக்கப்பட்டுள்ளது.

**கைம்மை நிலையும் சமூகக் கட்டுப்பாடுகளும்**

**சமூகத்தின் பார்வை**

இளம் வயதிலேயே கணவனை இழந்த யமுனாவை, பழமைவாத சமூக விதிகளுக்குள் முடக்குகிறது. அவளது ஆடை, அணிகலன்கள் மற்றும் நடத்தை என அனைத்தும் சமூகத்தின் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாகின்றன.

**உளவியல் போராட்டம்**

சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களால் ஏற்படும் சோர்வு, அவளை ஒருவித தனிமைக்குத் தள்ளுகிறது. அந்த விதிகளின் இறுக்கத்திலிருந்து விடுபட அவள் செய்யும் சிறு முயற்சிகள் கூட சமூகத்தால் குற்றமாகப் பார்க்கப்படுகின்றன.

**இசையும் விடுதலையும்**

**இசையின் ஆறுதல்**

யமுனாவின் கைம்மை நிலைக்கு அவளது இசைப் பயிற்சி ஒரு வடிகாலாக அமைகிறது. கர்நாடக இசையின் ஆழம், அவளைச் சூழ்ந்திருக்கும் துயரத்திலிருந்து மீட்டு ஒரு தியான நிலையைத் தருகிறது.

**சுயமரியாதை**

சமூகத்தின் தயவில் வாழாமல், தன் இசையின் மூலமும் சுய சிந்தனையின் மூலமும் அவள் ஒரு கம்பீரமான ஆளுமையாக உருவெடுக்கிறாள்.

**பாபுவின் காதலும் யமுனாவின் உறுதியும்**

பாபுவின் தீவிரமான காதல் யமுனாவை நோக்கி வந்தாலும், சமூகக் கட்டுப்பாடுகளுக்கு அஞ்சி அவள் ஆரம்பத்தில் தயங்குகிறாள். கைம்பெண்ணான ஒருத்தி காதலிப்பதும், மறுமணம் செய்வதும் சமூகத்தில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தும் என்ற எதார்த்தத்தை அவள் உணர்ந்திருக்கிறாள். எனினும், மரபுகளை விட மனித நேயமும், தூய காதலுமே உயர்ந்தவை என்பதை அவள் இறுதியில் உணர்கிறாள். அனைத்துத் தடைகளையும் தாண்டி, தனக்குள் இருக்கும் காதலை ஏற்றுக்கொண்டு பாபுவை நோக்கிச் செல்லும் அவள், ஆணாதிக்க சமூகத்திற்கு எதிரான ஒரு மௌனப் புரட்சியை நிகழ்த்துகிறாள்.

மோகமுள்' நாவலில் யமுனாவின் கைம்மை நிலை என்பது அவளுக்குச் சமூகம் விதித்த சிறை. ஆனால், அந்தச் சிறையையும் தாண்டி அவளது ஆளுமையும், பாபுவின் மீதான அவளது காதலும் எவ்வாறு வெல்கிறது என்பதை தி.ஜானகிராமன் மிக நுட்பமான உளவியல் ரீதியான மொழியில் விவரித்துள்ளார்.

**முடிவுரை**

தி.ஜானகிராமன் நாவல்களில் குறிப்பாக அம்மா வந்தாள், செம்பருத்தி, மோகமுள் போன்ற படைப்புகளில் கைம்பெண்களின் நிலை குறித்த சித்திரமும் அதற்கான அவரது நாவல் முடிவுகளும் தமிழ் இலக்கிய உலகில் மிக முக்கியமான புரட்சிகரமான பதிவுகளாகும். தி.ஜா அவர்கள் கைம்பெண்களைப் இரங்குதற்குரிய பாத்திரங்களாகக் காட்டி முடக்கவில்லை. மாறாக, சமூகத்தின் இரும்புக் கரங்களையும், 'மோகம்' என்னும் அகமுட்களையும் கடந்து, தங்களின் தனித்துவத்தையும், வாழ்வின் அர்த்தத்தைக் கண்டுணரும் ஆளுமை மிக்கப் பெண்களாகவே அவர்களைத் தன் நாவல் முடிவுகளில் நிலைநிறுத்துகிறார். அவரது படைப்புகள் கைம்பெண்களின் மறுவாழ்வையும், அவர்களுக்கான சமூக நீதியையும் இலக்கியப்பூர்வமாகச் சாத்தியப்படுத்தியுள்ளார்.

**துணைநூற்பட்டியல்**


1. சிலம்பொலி சு.செல்லப்பன், மணிமேகலை தெளிவுரை- பாரதி பதிப்பகம், சென்னை,1998
2. பாரதிதாசன், பாவேந்தர்., பாரதிதாசன் கவிதைகள்- உமா பதிப்பகம், சென்னை, 2018
3. ஜானகிராமன், தி., மோகமுள்- இரண்டாவது பதிப்பு, காலச்சுவடு பதிப்பகம், திருநெல்வேலி, 2014
4. ஜானகிராமன், தி., அம்மா வந்தாள்- மூன்றாம் பதிப்பு, காலச்சுவடு பதிப்பகம், திருநெல்வேலி, 2014
5. ஜானகிராமன், தி., செம்பருத்தி- காலச்சுவடு பதிப்பகம், திருநெல்வேலி, 2015